தேசிய திருவிவிலிய வினாடி வினா – 2026 (முதல்)

# கருப்பொருள்: படைப்பாளரான கடவுள்




## பிரிவு : தரம் 4 & 5

தேசிய மறைக்கல்வி நடுநிலையம்

## திருவிவிலிய வினாடி வினா - அட்டவணை

# தரம் 4 கருப்பொருள்: படைப்பாளரான கடவுள்


| தலைப்பு | பிரதான திருவிவிலிய பகுதி | கற்றல் பேறுகள் | மேலதிக மேற்கோல்கள் | நோக்கம் |
|---|---|---|---|---|
| படைப்புக் கதை | தொ.நூ. 1-2 அதிகாரங்கள் | கடவுளை அன்பான படைப்பாளராக காண படைப்புக்கதையை மீள கூறுவர். | தி.பா. 24: 1<br>தி.பா. 104: 24<br>தி.வெ. 4:11 | பிள்ளை, கடவுளின் வல்லமையும் நன்மையும் படைப்பில் காணக் கூடியதாயிருக்கும் |
| இயேசுவின் பிறப்பு | லூக் 2: 1- 20 | கடவுளின் மிக மேலான கொடையாக இயேசுவை அறிவர். | எசா. 9:6<br>பு. மத். 1:21<br>கலா. 4:4 | படைப்பவரின் அன்பு அவரது மகனது பிறப்புடன் தொடர்பு படுத்தப்படுத்துவார். |
| நம்பிக்கை அறிக்கை பகுதி 1 - 2 | திருத்தூதரின் நம்பிக்கை அறிக்கை | படைப்பாளரான கடவுளிலும் அவர் மகன் இயேசுவிலும் நம்பிக்கை கொள்ளுவர். | எபி. 11:3<br>பு.யோவா. 1:3<br>பு.யோவா. 3:16 | எமது இறை நம்பிக்கையை இறை படைப்புடனும் மீட்புடனும் இணைத்து காண்பர். |
| நற்கருணை அருளடையா-ளம் | 1கொரி. 10:16-21<br>யோவா.6:51-56<br>லூக். 22:14-20 | இயேசுவின் உண்மையான பிரசன்னம் நற்கருணையில் உள்ளது என புரிந்துக்கொள்வர். | மத். 28:20<br>யோவான் 6:35<br>லூக். 22:19 | இறைவனின் இறை அருள் அருளடையாளத்தில் தொடர்கின்றது, என்பதை தெரிந்துகொள்வர். |
| புகழ்ச்சி செபம் | தி.பா. 148 | இறைவனின் வல்ல செயல்களுக்காக அவரைப் புகழ்தல். தி.பா. 148 ஐ செபிப்பவர். | தி.பா. 150:6<br>தி.பா. 8:1<br>தி.பா. 100:1 | பிள்ளையை நன்றியுணர்வுக்கும் வழிபாட்டுக்கும் இட்டுச்செல்லல். |



## திருவிவிலிய வினாடி வினா - அட்டவணை

# தரம் 5 - கருப்பொருள்: படைப்பாளராகிய கடவுள்

| தலைப்பு | பிரதான இறைவார்த்தை பகுதி | கற்றல் பேறுகள் | மேலதிக வசனங்கள | நோக்கம் |
|---|---|---|---|---|
| மனிதனின் வீழ்ச்சி | தொ.நூ 3 - 4 அதிகாரங்கள் | பாவம் எவ்வாறு உலகில் நுழைந்தது என்றும் கடவுளின் இரக்கம் பற்றியும் அறிவர் | உரோ. 3:23<br>தி.பா. 103:8<br>யோவான் 1:29 | மீட்பின் தேவை மற்றும் இறை அன்பையும் காட்டுவதற்கு. |
| மீட்பரின் வாக்குறுதி | யோவான் 3:16 | இறை அன்பை அவர் தனது ஒரே மகனை அனுப்பியதன் மூலம் அறிவர். | யோவான் 8:12<br>உரோ. 5:8<br>ஏசாயா 7:14 | கடவுள் நம்பிக்கை மற்றும் மீட்பையும் வாக்களிக்கின்றார் என்பதை கற்பதற்கு. |
| நம்பிக்கை அறிக்கை | திருத்தூதர்களின் விசுவாச அறிக்கை | பாவமன்னிப்பு மற்றும் நிலைவாழ்வு பற்றி அறிவர். | லூக். 7:48<br>யோவான் 11:25<br>தி.பா. 103:12 | நம்பிக்கை பாவமன்னிப்பையும் நிலைவாழ்வையும் இணைக்கப்படுகின்றது என அறிவதற்கு. |
| ஒப்புரவு அருளடையாளம் | யோவான் 20:19-23 | ஒப்புரவிற்கான படிமுறைகளையும் இறைவனின் மன்னிப்பையும் அறிவர். | 1யோவான் 1:8-10<br>எசாயா 1:18<br>மத். 5:7 | கடவுள் தமது இரக்கத்தினால் எம்மை பாவத்தில் இருந்து மன்னிக்கிறார் என்பதை அனுவவித்தல். |
| மன்னிப்புச் செபம் | தி.பா. 51 | தாவீது போல் இறை இரக்கத்திற்காக மன்றாடுவர். | தி.பா. 34:18<br>பிலி. 4:6<br>லூக். 15:7 | மனம் வருந்துதலுக்கும் புதுப்பித்தலுக்கும் இட்டுச்செல்கிறது என்பதை அறிதல். |



# தரம் 4 – படைப்பாளரான கடவுள்

## 1. பொதுவான நோக்கங்கள்

- ☼ உலகினதும் மற்றும் ஒவ்வொரு மனிதரதும் அன்பான படைப்பாளராக இறைவனை பிள்ளைகள் கண்டறிய உதவுதல்.
- ☼ கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்து இறையன்பின் கொடையும் மீட்பருமாவார் என்பதை பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்துதல்.
- ☼ தூய நற்கருணையானது எம்மிடையே உள்ள இயேசுவின் உயிருள்ள பிரசன்னம் என்பதை அடையாளம் கண்டுகொள்ள வழிநடத்துதல்.
- ☼ படைப்பனைத்துடனும் இணைந்து இறைவனை துதித்து புகழ்பாடி செபிக்க ஊக்குவித்தல்.

## 2. மறைக்கல்வியின் நான்கு தூண்கள்

### I. திருவிவிலியம் - கடவுளின் வார்த்தை



**கருப்பொருள் : தொடக்க நூல் 1–2** (படைப்புக் கதை)

- ☼ ஆறுநாட்களில் உலகப் படைப்பு
- ☼ கடவுளின் சாயலில் ஆண் மற்றும் பெண் படைப்பு
- ☼ கடவுள், படைப்பை (நல்லதெனக் கண்டார்) ஆசீர்வதித்து 7ம் நாளில் ஓய்ந்திருந்தார்.

**மேலதிக பகுதிகள் (புதிய ஏற்பாடு) : லூக்கா 2**

- ☼ பெத்லகெமில் கடவுளின் மகனாகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பு
- ☼ படைப்பாளரான கடவுளை வானதூதரும் மேய்ப்பர்களும் மகிமைப்படுத்துகின்றனர்.

**கற்றல் பெறுபேறுகள்:**

- ☼ படைப்புக் கதையை பிள்ளைகள் நாளுக்கு நாள் மீளக் கூறுவர்.
- ☼ படைப்பாளரான கடவுள் மனிதனான இயேசுவில் படைப்பினுடன் இணைவதை அடையாளம் காண்பர்.
- ☼ இயற்கை மற்றும் மனித வாழ்வில் கடவுளின் நன்மையைக் காணத்தொடங்குவர்.

### II. நம்பிக்கை அறிக்கை - விசுவாசப் பிரமாணம்

**உள்ளடக்கம் : திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை**

1. “விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல கடவுளாகிய இறைவனை நம்புகின்றேன்” - 1
2. “அவருடைய ஒரே மகனாகிய எம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகின்றேன்” - 2

**கற்றல் பேறுகள்:**

- ☼ பிள்ளைகள் கடவுளை படைப்பாளராகவும் இயேசுவை கடவுளின் மகனாகவும் சாதாரண வார்த்தைகளில் விளக்கிக் கூறுவர்.
- ☼ முழுத் திருஅவையுடனும் இணைந்து “நான் நம்புகிறேன்” எனும் விசுவாச பகுதியை அறிக்கையிடுவர்.

### III. அருளடையாளங்கள் - கிறிஸ்துவுக்குள் வாழ்வு

**உள்ளடக்கம்: திவ்ய நற்கருணை**

திவ்ய நற்கருணையானது கிறிஸ்துவின் உடலையும் இரத்தத்தையும் பகிர்தல் - 1கொரி 10:16 - 25
இயேசுவே உயிருள்ள உணவு - யோவான் 6: 51-56.
நற்கருணையை ஏற்படுத்துதல்: மத். 26:26 - 29, மாற்கு 14:22 - 25, லூக். 22:14 - 20

**கற்றல் பேறுகள்:**

- ☼ படைப்பு (வாழ்வு, கடவுளின் கொடை) - இயேசு (கடவுளின் அன்பு கொடை)
- ☼ திவ்விய நற்கருணை (கடவுள் தன்னையே கொடையாகக் கொடுத்தல்) என்பவற்றை தொடர்புபடுத்தி அறிந்துகொள்வர்.
- ☼ திருப்பலியானது இயேசு தனது உடலையும் இரத்தத்தையும் கொடையாகக் கொடுத்ததன் கொண்டாட்டம் என அறிந்துகொள்வர்.

## VI. செபம் - வாழ்வால் இறைவனைப் புகழ்தல்

- ☼ உள்ளடக்கம் - திருப்பாடல் 148 படைப்பின் புகழ்பாடல்
- ☼ வானம், பூமி விலங்குகள், தாவரங்கள் மற்றும் மனிதர் அனைத்தையும் படைத்தவரை புகழ்தல்.

**கற்றல் பேறுகள்:**

- ☼ பிள்ளைகள் தி.பா. 148 இல் இருந்து தெரிவு செய்யப்பட்ட பகுதிகளை மனப்பாடம் செய்வர்.
- ☼ இறைபுகழ் கூறும் சிறு செபங்களை தங்கள் சொந்த சொற்களால் உருவாக்குவர்.

## 3. கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கான பரிந்துரைகள்

- ☼ **கதையாகக் கூறுதல் :** படைப்புக் கதை, இயேசு பிறப்புக் கதை, இறுதி இராப்போசன கதை
- ☼ **காண் சாதனங்கள்:** படைப்புச் சக்கரம், கிறிஸ்து பிறப்பு நிகழ்வுகள்.
  திவ்விய நற்கருணையின் அடையாளங்கள்.
- ☼ **அபிநய பாடல் :** படைப்பு, நம்பிக்கை அறிக்கை மற்றும் திருப்பாடல் 148
- ☼ **ஆக்க செயற்பாடுகள்:**
  - **படைப்புக் காட்சிகளை வரைதல்**
  - **இயேசு பிறப்புக் கதையை நாடகமாக்குதல், நடித்தல்**
  - **புகழ்ச்சி செபங்களை ஒரு வசனத்தில் எழுதுதல்.**

| பிரிவு | வகை | புள்ளிகள் |
|---|---|---|
| எழுத்து சுற்று | பல்தேர்வு வினாக்கள், இடைவெளி நிரப்புதல், குறு விடைகள் | 40 |
| மனனப்பகுதி சுற்று | தி.பா. 148 - நம்பிக்கை அறிக்கை | 20 |
| கதை கூறல்/வரைதல் சுற்று | படைப்பு அல்லது இயேசு பிறப்பு காட்சி | 20 |
| கிரகித்தல் சுற்று | படைப்பு மற்றும் நற்கருணைப் பற்றிய காரணம் சா-ர்ந்த சார்ந்த வாய்மொழி வினாக்கள் (ஏன்/எதற்கு...) | 20 |

**பரிசில் திட்டம்**

- **தங்கம்** — 85–100
- **வெள்ளி** — 70–84
- **வெண்கலம்** — 50–69
- **சான்றிதழ்** — 50க்கு மேல்

## 5. தரம் 4ன் இறுதியில் எதிர்ப்பார்க்கப்படும் கற்றல் பெறுபேறுகள்.

- ☼ **திருவிவிலியத்தில் படைப்பு மற்றும் இயேசு பிறப்பு கதைகள் பற்றிய அடிப்படைய விடயங்கள் பற்றி பரீட்சயமடைதல்.**
- ☼ **படைப்பாளரான கடவுள் மற்றும் இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கையை அறிக்கையிட இயலுமாயிருப்பர்.**
- ☼ **தூய நற்கருணையானது, இயேசு தன்னையே கொடையாக தந்தார் என்பதைப் புரிந்துக்கொள்ள தொடங்குவர்.**
- ☼ **திருவிவிலியம் மற்றும் தனிப்பட்ட செபத்தின் மூலம் இறைவனை புகழும் வழக்கத்தை ஏற்படுத்திக்கொள்வர்.**

# தரம் 5 – படைப்பாளரான கடவுள்

## 1. பொதுவான நோக்கங்கள்

- ☼ மனுகுலத்திற்கான இறைத்திட்டத்தை படைப்பு, வீழ்ச்சி, மீட்பின் வாக்குறுதி என்பவற்றினூடாக பிள்ளைகள் புரிந்துகொள்ள உதவுதல்.
- ☼ படைப்பாளரான கடவுகளால் வாக்களிப்பட்ட மீட்பராம் இயேசுவை அறிந்துகொள்ளல்.
- ☼ கடவுளின் இரக்கத்தின் அடையாளமாகிய ஒப்புரவு எனும் அருளடையாளத்தின் மதிப்பை வளர்த்துக்கொள்ளல்.
- ☼ திருப்பாடல் 51இல் தாவீது அரசரைப் போன்று மன்னிப்புக்காகச் செபிக்க கற்றுக்கொள்ளுதல்.

## 2. மறைக்கல்வியின் நான்கு தூண்கள்

### I. திருவிவிலியம் - கடவுளின் வார்த்தை.



**பழைய ஏற்பாடு: தொ. நூ 3 – 4 அதிகாரங்கள்**

- ☼ ஆதாம், ஏவாள்: பாவத்தில் வீழ்தல், பாவம் உலகில் நுழைதல்.
- ☼ காயினும் ஆபேலும்: பாவத்தின் விளைவு மற்றும் கடவுளின் நீதியும் இரக்கமும்.

**புதிய ஏற்பாடு : யோவான் 3:16 – 18**

- ☼ தமது ஒரே மகனை கொடுக்குமளவிற்கு கடவுள் உலகை அன்பு கூர்ந்தார்.
- ☼ கடவுளின் மீட்பின் வாக்குறுதி இயேசுவில் நிறைவேறுகிறது.

**கற்றல் பேறுகள்:**

- ☼ மனித வீழ்ச்சியையும் அதன் விளைவு பற்றிய கதைகளை பிள்ளைகள் விளங்கிக் கூறுவர்.
- ☼ இறையன்பையும் இயேசு கிறிஸ்து மூலம் மனுக்குலத்தை மீட்கும் வாக்குறுதியையும் விளக்குவர்.

### II. நம்பிக்கை அறிக்கை - விசுவாசப் பிரமாணம்

**உள்ளடக்கம் : திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை – பகுதிகள் 10 & 12**

பகுதி 10: “பாவமன்னிப்பை நம்புகின்றேன்”
பகுதி 12: “முடிவில்லா வாழ்வையும் நம்புகின்றேன்”

**கற்றல் பேறுகள்:**

- ☼ பிள்ளைகள், பாவத்திற்கும் மன்னிப்பிற்கும் முடிவில்லா வாழ்விற்கும் இடையிலான தொடர்பை விளங்கிக் கொள்வர்.
- ☼ இவ்விசுவாச அறிக்கைகளின் பகுதிகளை சரளமான வார்த்தைகளில் விளங்கிக்கூறுவர்.

### III. அருளடையாளங்கள் - கிறிஸ்துவுக்குள் வாழ்வு.

**உள்ளடக்கம்: ஒப்புரவு அருளடையாளம்**

- ☼ யோவான் 20: 19 - 23 “எவருடைய பாவங்களை மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும்”

**கற்றல் பேறுகள்:**

- ☼ ஒப்புரவு அருளடையாளம் இயேசுவின் இரக்கத்தின் கொடை என்பதை உணர்ந்து கொள்வர்.
- ☼ ஒப்புரவு அருளடையாளத்தைப் பெறுவதற்கான படிமுறைகளை அறிந்து கொள்வர்: பாவங்களை நினைத்த மனம் வருந்துதல், அறிக்கையிடுதல், பாவம் செய்வதில்லை எனத் தீர்மானித்தல், பாவமன்னிப்பு பெறுதல், பரிகாரம் செய்தல்.

**IV. செபம் - புகழ்பாடுதல் மற்றும் மனந்திரும்பும் வாழ்க்கை**

**உள்ளடக்கம்: திருப்பாடல் 51 - மன்னிப்பிற்கான செபம்**

☼ தாவீது அரசன் தனது பாவத்திற்கு பின்னர், தனது பாவத்தை நினைத்து மனந்திரும்புவதற்கு செபித்த செபம்.

**கற்றல் பேறுகள்:**

☼ தெரிவு செய்யப்பட்ட திருப்பாடல் 51 இன் வசனங்களை பிள்ளைகள் மனனம் செய்து கூறுவர்.

☼ இறைவனின் மன்னிப்பை வேண்டி சிறு செபம் ஒன்றை உருவாக்கி எழுதுவர்.

## 3. கற்றல், கற்பித்தலுக்கான பரிந்துரைகள்

☼ **கதை கூறுதல் :** மனிதனின் வீழ்ச்சி, காயீன் ஆபேல், இயேசுவின் மீட்பின் வாக்குறுதி.

☼ **காண் சாதனங்கள் :** ஏதேனில் ஆதாம் ஏவாள், சிலுவை அடையாளம் (யோவான் 3:16), ஒப்புரவு காட்சி

☼ **அபிநய பாடல் :** கடவுளின் அன்பு, இறை மன்னிப்பைக் குறிக்கும் கருத்துக்களில் பாடல்

☼ **ஆக்கச் செயற்பாடுகள் :**

- பாவத்திற்கு முன்னரும் பின்னருமான காட்சிகளை வரைதல்.
- திருப்பாடல் 51ஐ போல தனிப்பட்ட செபம் ஒன்றை எழுதுதல்.
- ஒப்புரவு அருளடையாளத்ததை நடித்தல் (குருவும் பாவமன்னிப்பு பெறுபவரும்)

| பிரிவு | வகை | புள்ளிகள் |
|---|---|---|
| எழுத்துச் சுற்று | பல்தேர்வு வினாக்கள், இடைவெளி நிரப்புதல், குறு விடைகள் | 40 |
| மனனப்பகுதி சுற்று | தி.பா. 51 அல்லது - நம்பிக்கை அறிக்கை பகுதிகள் | 20 |
| கதை கூறல்/வரைதல் சுற்று | மனிதனின் வீழ்ச்சி அல்லது மீட்பரின் வாக்குறுதி. | 20 |
| கிரகித்தல் சுற்று | பாவம்/ஒப்புரவு பற்றிய காரணம் சார்ந்த வாய்மொழி (என்ன?, ஏன்? எப்படி?, எதற்கு?)... வினாக்கள் | 20 |

### பரிசில் திட்டம்

- **தங்கம்** — 85–100
- **வெள்ளி** — 70–84
- **வெண்கலம்** — 50–69
- **சான்றிதழ்** — 50க்கு மேல்



## 5. தரம் 5 இன் இறுதியில் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள்

☼ **தொ.நூ. 3 - 4 அதிகாரத்தின் ன் ஒளியில், பாவத்தையும் அதன் விளைவுகளையும் விளங்கிக் கொள்வர்.**

☼ **இயேசுவே மீட்பர் எனும் அடிப்படை அறிவை பெறுவர்.**

☼ **ஒப்புரவு அருளடையாளத்துடனும் இறைமன்னிப்புடனும் பரீட்சியமடைவர்.**

☼ **தி.பா. 5lனூடாக மன்னிப்பிற்காக செபிப்பதன் அனுபவத்தைப் பெறுவர்.**